முருகப்பெருமான் துணை

**மகான் கௌதமர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.11.2022**, புதன்கிழமை

1. தருமனே ஆறுமுக அரங்கனே
   தவமாக சக்திதனை வெளிப்படுத்த
   ஆறுமுகனார் அவதாரமாக வந்த
   அண்ணலே உன்பெருமை கூறி
2. கூறியே அனுகூல ஆசிதனை
   குறைவிலா சுபகிருது துலை திங்கள்
   தெரிவிப்பேன் மூவையோர்திகதி கணக்கன் வாரம்
   (சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 16 ம் நாள் 02.11.2022, புதன்கிழமை)
   தேசிகனுக்கு கௌதமர் யானும்
3. யானுமே உலகநலம் பெற உரைப்பேன்
   உண்மையாய் வாழும் ஞானவான்களை
   ஞானதேசிகன் ஒன்றிணைத்து சேவையாற்றும்
   நல் அற்புத சேவை நடந்துவர
4. வருகவே அரங்கன் வழி தேடி
   வருமுலகில் கலியுக மக்கள்
   முருகா என செபதபத்தை
   முனகி வந்தாலே போதுமப்பா
5. அப்பனே மாற்றம் சடுதி
   அகிலம் அடைய நேரும்
   காப்பாக புலன்களை வெல்ல
   கட்டாயம் குருவருள் வேண்டும்
6. வேண்டி பொறிபுலன் வென்ற
   வேலவன் சக்தியும் ஆன
   கண்டுரைப்பேன் அரங்கன் பதம்
   கலியுகத்தார் சரணடைவு காண
7. காணவே புலன்கள் அடங்கி
   கட்டுப்பாடும் நல் சிந்தையும்
   ஞானவழி வருகின்ற தொடர்கின்ற
   நல்வாய்ப்பும் பெருகி இனிதே
8. இனிதே உலக மக்களுக்கு
   இணையில்லா ஞானபலமும்
   கனிவேலவன் ஆசி துணை
   கருணையும் கிட்டி சிறப்பர்
9. சிறப்புதரும் அரங்கன் மார்க்கம்
   சித்தி தரும் உயர் மார்க்கம்
   அறத்தின் வழி வரும் மக்கள்
   அனைவருக்குமே அரங்கன் மார்க்கம்

10. மார்க்கம் இலகுவாக சித்தி
மண்ணுலகில் கிட்டி மாற்றம்
பார்த்துரைக்க ஏற்றம் காணும்
பாருலகே ஞானவழிக்கு வரும்

11. வருகவே ஞான ஆட்சியாக
வையகம் வளரும் மலரும்
தரும பலமாக தரணி சிறப்புறும்
தணிகாசலன் தலைமை காணும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–